விச்வாவஸு ஸ்ரீ ஐப்பசி மீ
அக்டோபர் - நவம்பர் 2025

மலர்: 8
இதழ்: 7

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்





MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com





ஸ்ரீ:

விச்வாவஸு ௵ ஐப்பசி ௴
அக்டோபர் - நவம்பர் 2025

மலர்: 8
இதழ்: 7


ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது


**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன் | ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி



**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed by: yeSKay designs





**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com




ஶ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^{3}$ரி ஸமம் ஸ்தா$^{2}$நம் ப்$^{3}$ரஹ்மாண்டே$^{3}$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^{3}$வோ ந பூ$^{4}$தோ ந ப$^{4}$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

கார்மேகங்கள் சூழும் இந்த சரற்காலத்தின் முதல் மாதமான ஐப்பசித் திங்களுக்கு பத்மநாபன் எனும் திருநாமத்தை உடைய எம்பெருமான் அதிஷ்டான தேவதையாக விளங்குகிறான். இந்த உலகத்தையே படைத்தருளும் எழில் உந்தியில் பிரமனைப் படைத்து நான்கு வேதங்களை அவனுக்கு உபதேசம் செய்தவன் இந்த எம்பெருமான்.

‘சிவந்த பொன்னாலாகிய அழகிய மதிள் சூழ்ந்த ஹஸ்திகிரியில் உள்ள மஹாவீரனான பேரருளாளன், எம்முடைய பத்மநாபனுமாகி, என்னுடைய பின்பாகத்தையும், மனஸ்ஸையும், பற்றிக்கொண்டு ஸ்திரமாய் நின்று, உஷ்ணமான, சிவந்த ஆயிரம் கதிரவனுக்கு ஒப்பான திருமேனி நிறமுடையனாய், அழகிய சிவந்த திருக்கைகளில் ஐந்து ஆயுதங்களைத் தரித்து, அஞ்சாதே என்று கூறிக் காப்பான்,’ என்று தேவப்பெருமாளை பத்மநாபனாக பாவித்து பனுவல் வரைகிறார் ஸ்வாமி தேசிகன்.

பாலேய் தமிழரான முதலாழ்வார்கள் இந்த மாதத்தில் அவதரித்தது மிகவும் சிறப்பாகும். ‘பாட்டுக்குரிய பழையவர்’ என்று ஸ்வாமி தேசிகனும் போற்றிப் புகழ்கிறார் இவர்களில் கடையவரான பேயாழ்வார் நம் திருமயிலையில் அவதரித்தது நாம் பெற்ற பெறும் பேறு. நம் ஸந்நிதியில் எழுந்தருளியிருக்கும் ஆழ்வாருக்குப் பத்து நாட்கள் திருநக்ஷத்ரம் கொண்டாடப்படுவதும் மிகவும் பொருத்தமாகும்.

‘திருவேங்கடத்துறைவானின் திவ்ய கருணைக் கடலினின்றும் ஒருபுறம் கண்டிப்பான கட்டளை என்னும் ஆறு பிறந்ததோ என்னும்படி உருவானவராக அசேஷ விக்னங்ளையும் அழிக்க வல்லவராக உள்ள விஷ்வக்ஸேனரை வணங்குகிறேன்,’ என்று ஆசார்யரால் கொண்டாடப்பட்ட ஸேனைநாதனும், ஶ்ரீபாஷ்யகாரரின் ஜ்ஞான புத்ரர் என்று பெரியோர்களால் வணங்கப்பட்ட ஆசார்யர் திருக்குருகைப்பிரான் பிள்ளானும் அவதரித்தது ஐப்பசி மாதத்திற்கு மேலும் மெருகேற்றுகிறது.

ஸத்யபாமை பிராட்டியுடன் கண்ணபிரான், தன்னை அழிவற்றவனாக நினைத்துப் பொருந்திக்கிடந்த நரகாஸுரனை தப்பிப்போக முடியாதபடி வளைத்துக்கொண்டு திருவாழியாலே நிரஸித்து அவனுடைய வேண்டுதலின் பேரில் அனைவரும் கொண்டாடும் படியான தீபாவளி பண்டிகையும் இந்த மாதத்தில் கொண்டாடப்படுவது மேலும் ஒரு விசேஷம்.

இத்தகைய பெருமைகளைத் தாங்கிய இம்மாத தேசிக சந்தேசம் முந்தைய மாதத்திய வைபவங்களின் வண்ணப் படங்களுடனும் விசேஷ வ்யாஸங்கள் மற்றும் ஆங்கிலத் தொடர்களுடனும் இதோ உங்கள் கரங்களில்.

ஸ்ரீ:

# Well Begun Is Half Done

## FROM THE DESK OF TRUSTEES

The month of Purattasi concluded with grandeur and devotion as our Devasthanam witnessed a series of spiritually uplifting celebrations. The Navarathri Utsavam was conducted with splendour, featuring daily Alankarams offered to the Divine Mother, and culminated in the Mahanavami Utsavam, followed by Vijayadasami. The Annual Swami Desikan Utsavam was celebrated with deep reverence and bhakti, drawing large gatherings of devotees who participated enthusiastically in the various sevas and purappadus. This was followed by the Annual Pavithrotsavam, performed in accordance with Agamic traditions to purify and rejuvenate the sanctity of all Sannidhis and the entire temple premises.

As we now enter the sacred month of Aippasi, we look forward to the upcoming Peyazhwar Thirunakshatram and the 10-day Festival, which will be observed with the usual devotional fervour. The Deepavali Utsavam will also be celebrated joyously, invoking divine blessings for peace, prosperity, and spiritual well-being for all devotees.

We are pleased to share that plans are underway to conduct the Maha Samprokshanam for our temple. The previous Samprokshanam was held in 2013, and as twelve years have now elapsed, the time has arrived to once again perform this consecration for the rejuvenation and spiritual renewal of the temple. In preparation for this, the following works are proposed:

1. Painting and restoration of all Vimanams and Gopurams;
2. Increasing the height of the Vimanam of Sri Garudan Sannadhi to facilitate the proper performance of Thirumanjanam and Archanai, in response to the growing demand from devotees;
3. Construction of new Vimanams for Sri Andal, Sri Lakshmi Narasimhar, and Sri Ramar Sannadhis;
4. Construction of Alankara Vayil at the entrance and exit gates opposite Swami Desikar Sannadhi.
5. Renovation and reconstruction of the Kal Mandapam near the main gate, restoring it to its traditional form and utility.

We are also happy to inform devotees that the construction of the new building opposite the temple is progressing well. The Ground Floor will house a Multipurpose Hall to conduct Upanyasams, music programmes, and small family functions. The First and Second Floors will each have three residential units to provide accommodation for Kainkaryaparas who render dedicated service to the temple.

We extend our heartfelt gratitude to all devotees and donors for their continuous support, encouragement, and participation in every temple activity. We humbly invite those who wish to contribute towards the forthcoming Samprokshanam and related developmental works to come forward and be part of this noble kainkaryam. Your generous contributions will go a long way in preserving and glorifying our ancient temple and its rich Sampradayic heritage.

May Swami Desikan and the Divya Dampathis bless all devotees and their families with health, prosperity, and spiritual upliftment.

# விச்வாவஸு வருட ஐப்பசி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| அக்டோபர் / நவம்பர் | ஐப்பசி | | | | | |
| | | | | | | |
| 18.10.2025 | 1 | த்வாதசி | சனி | பூரம் | துலா விஷூ புண்யகாலம். காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ ஹேமப்பூர் ஸ்ரீராம் |
| 19.10.2025 | 2 | த்ரயோதசி | ஞாயிறு | உத்திரம் | காலை தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை உள்புறப்பாடு. எண்ணெய்குடம் வீதி வருதல் | ஸ்ரீ S.V.S. ராகவன் பண்ட் |
| 20.10.2025 | 3 | சதுர்தசி | திங்கள் | ஹஸ்தம் | தீபாவளிப் பண்டிகை. பெருமாள், தேசிகன் திருமஞ்ஜனம். மாலை பொழுதுடன் ஆராதனம். பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ R. வாஸுதேவன் குடும்பத்தினர் |
| 21.10.2025 | 4 | அமாவாசை | செவ்வாய் | சித்திரை | பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ T.E. தேசிகாச்சாரி குடும்பத்தினர் |
| 22.10.2025 | 5 | ப்ரதமை | புதன் | ஸ்வாதி | அன்னக்கூட உத்ஸவம். காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம் | ஸ்ரீ S. கோபால க்ருஷ்ணன் |
| 23.10.2025 | 6 | த்விதீயை | வியாழன் | விசாகம் | பேயாழ்வார் உத்ஸவம் 1-ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு. பெருமாள், பேயாழ்வார் திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு பெருமாள், பேயாழ்வார் ஆஸ்தானம். திருவாய்மொழி ஸேவாகாலம் சாற்றுமுறை | பேயாழ்வார் உத்ஸவம் 10 நாட்களும் ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 24.10.2025 | 7 | த்ருதீயை | வெள்ளி | அனுஷம் | காலை தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை உள்புறப்பாடு. பேயாழ்வார் உத்ஸவம் 2-ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு. பெருமாள், பேயாழ்வார், திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்று முறை. இரவு பெருமாள், பேயாழ்வார் ஆஸ்தானம். திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | தாயார் உத்ஸவம்: ஸ்ரீ அழிசூர் வீரராகவன் குடும்பத்தினர் & ஸ்ரீ A.V. ராமன் |
| 25.10.2025 | 8 | சதுர்த்தி | சனி | அனுஷம் / கேட்டை | பேயாழ்வார் உத்ஸவம் 3-ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு. பெருமாள், பேயாழ்வார் திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு பெருமாள், பேயாழ்வார் ஆஸ்தானம். திருவாய்மொழி ஸேவாகாலம் சாற்றுமுறை | |
| 26.10.2025 | 9 | பஞ்சமி | ஞாயிறு | கேட்டை / மூலம் | பேயாழ்வார் உத்ஸவம் 4-ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு. பெருமாள், பேயாழ்வார் திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு பெருமாள், பேயாழ்வார் ஆஸ்தானம். திருவாய்மொழி ஸேவாகாலம் சாற்றுமுறை | |
| 27.10.2025 | 10 | ஷஷ்டி | திங்கள் | மூலம் | பேயாழ்வார் உத்ஸவம் 5-ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு. பெருமாள், பேயாழ்வார் திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு பெருமாள், பேயாழ்வார் ஆஸ்தானம். திருவாய்மொழி ஸேவாகாலம் சாற்றுமுறை | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 28.10.2025 | 11 | ஸப்தமி | செவ்வாய் | பூராடம் | ஸேனைநாதன் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், ஸேனைநாதன் திருமஞ் ஜனம். மாலை வீதிபுறப்பாடு, ஆஸ்தானம். பேயாழ்வார் உத்ஸவம் 6-ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு. பெருமாள், பேயாழ்வார் திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு பெருமாள், பேயாழ்வார் ஆஸ்தானம். திருவாய்மொழி ஸேவாகாலம் சாற்றுமுறை | ஸேனைநாதன் உத்ஸவம்: ஸ்ரீமதி சோபனா ராமரத்தினம் |
| 29.10.2025 | 12 | அஷ்டமி | புதன் | உத்திராடம் | பேயாழ்வார் உத்ஸவம் 7-ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு. பெருமாள், பேயாழ்வார் திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு பெருமாள், பேயாழ்வார் ஆஸ்தானம். திருவாய்மொழி ஸேவாகாலம் சாற்றுமுறை. தேசிகன் 27-ம் நாள் விடாயாற்றி உத்ஸவம். காலை திருமஞ்ஜனம். மாலை புஷ்ப பல்லக்கு வீதிபுறப்பாடு | விடாயாற்றி உத்ஸவம்: ஸ்ரீ T. ஸ்ரீநிவாஸன் & ஸ்ரீ S. பரத்வாஜ். புஷ்ப பல்லக்கு: ஸ்ரீ P.V. ராகவன் (பண்ட்) & C/o. ஸ்ரீ மதுதேசிகன் குடும்பத்தினர் |
| 30.10.2025 | 13 | நவமி | வியாழன் | ச்ரவணம் | பொய்கையாழ்வார் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், பொய்கையாழ்வார், தேசிகன் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம். பேயாழ்வார் உத்ஸவம் 8-ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு. பெருமாள், பேயாழ்வார் திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்று முறை. இரவு பெருமாள், பேயாழ்வார் ஆஸ்தானம். திருவாய்மொழி ஸேவாகாலம் சாற்றுமுறை | பொய்கையாழ்வார் & ச்ரவணம்: ஸ்ரீ T.R. தேவநாதாசார்யர் |
| 31.10.2025 | 14 | தசமி | வெள்ளி | அவிட்டம் | பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், பூதத்தாழ்வார் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு, ஆஸ்தானம். ஸேவாகாலம். தாயார் திருமஞ்ஜனம். உள்புறப்பாடு. பேயாழ்வார் உத்ஸவம் 9-ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு. பெருமாள், பேயாழ்வார் திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு பெருமாள், பேயாழ்வார் ஆஸ்தானம். திருவாய்மொழி ஸேவாகாலம் சாற்றுமுறை | தாயார் உத்ஸவம் & பூதத்தாழ்வார் உத்ஸவம்: ஸ்ரீ S.T. நரஸிம்ஹாசார்யர் குடும்பத்தினர் |
| 01.11.2025 | 15 | ஏகாதசி | சனி | சதயம் | பேயாழ்வார் சாற்றுமுறை. மங்களா சாஸனம். காலை வீதிபுறப்பாடு. பின்பு பெருமாள், தாயார், பேயாழ்வார் திருமஞ் ஜனம். மாலை வீதிபுறப்பாடு, ஆஸ்தானம். ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 02.11.2025 | 16 | த்வாதசி / ஏகாதசி வ்ரதம் | ஞாயிறு | பூரட்டாதி | காலை பேயாழ்வார் கந்தப்பொடி உத்ஸவம். வீதிபுறப்பாடு. பெருமாள் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 03.11.2025 | 17 | த்ரயோதசி | திங்கள் | உத்திரட்டாதி | த்வாதசி. திருமால்வடை | |
| 04.11.2025 | 18 | சதுர்தசி | செவ்வாய் | ரேவதி | திருமால்வடை | |
| 05.11.2025 | 19 | பௌர்ணமி | புதன் | அச்வினி / பரணி | பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ பாலாஜி ராஜகோபாலன் |
| 06.11.2025 | 20 | ப்ரதமை | வியாழன் | பரணி / க்ருத்திகை | திருமால்வடை | |
| 07.11.2025 | 21 | த்விதீயை | வெள்ளி | க்ருத்திகை / ரோஹிணி | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். உள்புறப்பாடு | தாயார் உத்ஸவம்: ருக் மணி அம்மாள் பண்ட் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 08.11.2025 | 22 | த்ருதீயை | சனி | ம்ருகசீர்ஷம் | திருக்கச்சி நம்பிகள் | |
| 09.11.2025 | 23 | சதுர்த்தி | ஞாயிறு | திருவாதிரை | ஸ்ரீ ராமானுஜர் | |
| 10.11.2025 | 24 | பஞ்சமி | திங்கள் | புனர்வஸு | ராமர் திருமஞ்ஜனம், ஆஸ்தானம் | ஸ்ரீ V.D.R. பண்ட் |
| 11.11.2025 | 25 | ஷஷ்டி / ஸப்தமி | செவ்வாய் | புஷ்யம் | திருமால்வடை | |
| 12.11.2025 | 26 | அஷ்டமி | புதன் | ஆயில்யம் | திருமால்வடை | |
| 13.11.2025 | 27 | நவமி | வியாழன் | மகம் | திருமழிசைப்பிரான் | |
| 14.11.2025 | 28 | தசமி | வெள்ளி | பூரம் | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். உள்புறப்பாடு | தாயார் உத்ஸவம்: மாங்குடி ஸ்ரீ P. ரங்கராஜன் |
| 15.11.2025 | 29 | ஏகாதசி | சனி | உத்திரம் | காலை பெருமாள் உத்ஸவர், தாயார் திருமஞ்ஜனம். உள்புறப்பாடு | ஸ்ரீ S.V.S. ராகவன் பண்ட் |
| 16.11.2025 | 30 | த்வாதசி / ஏகாதசி வ்ரதம் | ஞாயிறு | ஹஸ்தம் | கார்த்திகை மாதப்பிறப்பு – விஷ்ணுபதி புண்யகாலம். காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | மாதப்பிறப்பு: ஸ்ரீமதி ஹரிணி சிந்தாமணி. ஏகாதசி: பௌண்டரீகபுரம் ஸ்ரீ ராஜகோபாலன். ஹஸ்தம்: ஸ்ரீ ஸ்ரீராமன் குடும்பத்தினர் & ஸ்ரீ K.S.N. குடும்பத்தினர் |

## வைணவ வழக்குச் சொற்கள் 14

**திருக்காப்பு நீக்குதல்:** பெருமாள் எழுந்தருளியுள்ள பெட்டியின் மூடியைத் திறத்தல், கதவைத் திறத்தல்

**திமிலோகம்:** துமிலம், பெரிய ஆரவாரம்

**தினசர்யை:** அன்றாடம் கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகள்

**திவ்யதேசம்:** ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திருத்தலம்

**தீம்பு:** விஷமம்; mischief

**தீர்த்தவாரி:** கோயில்களில் ப்ரஹ்மோத்ஸவத்தில் புஷ்கரணியில் நடக்கும் திருமஞ்சனம். அப்போது அடியார்களும் முழுவதுமாகவோ சிறிதோ மூழ்கிக் குளிப்பர்; மங்கள ஸ்நானம். (வேறு சில முக்கிய தினங்களிலும், கடலிலும் தீர்த்தவாரி உண்டு).

**தீர்த்தமாடிவிட்டு:** தலைக்கும் சேர்த்து நீராடிவிட்டு

**துவரி:** காஷாயம், காவி

**தூபக்கால்:** சாம்பிராணி காட்டும் உலோகக் கரண்டி

**தூரியம்:** வாத்யம் (இசைக்கருவி)

**தெற்கு வீடு:** திருக்குறுங்குடி

**தேவகானம்:** திவ்யப்ரபந்தப் பாசுரங்களை ராக தாளத்துடன் இசை முறையில் பாடுதல்

**தேவதாந்தரம்:** (விஷ்ணுவைத் தவிர) பிற தெய்வங்கள்

**தேவதாந்த்ர பஜனம்:** புறச்சமய வழிபாடு, பிற தெய்வ வழிபாடு (புறந்தொழல்)

**தேவரீர்:** தாங்கள்

**தேசிகன்:** உயர்ந்த பெருமகன், வேதாந்த தேசிகன்; exceptional scholar

**தொங்கல்:** கிரீடத்தைச் சுற்றிச் சாத்தும் மாலை + வளையம்

**தொடக்கு:** ஸம்பந்தம்

**தொம்பை:** உத்ஸவ மண்டபங்களிலும், தேரிலும் நீண்டு தொங்கும் தூண் போன்ற வண்ணத்துணி அலங்காரம்

**தோதகம் பண்ணுதல்:** அலட்டி ஆர்ப்பாட்டம் செய்தல் (த்யோதகம் = மின்மினிப்பூச்சி (அது தன் இருப்பை ஒளிவீசி வெளிப்படுத்திக்கொண்டே இருப்பது போல்)

**தோள்தீண்டி:** மிக நெருங்கியவர்

**தோளுக்கினியான்:** பெருமாளை உலாவுக்கு எழுந்தருளப் பண்ணுவதில் பயன்படுத்துகின்ற தாங்கு அமைப்பு

**தோதவத்தி:** துவைத்து உலர்த்திய தூய்மையான வஸ்த்ரம் (துணி)

**நம்பெருமாள்:** திருவரங்க உத்ஸவர்

**நக்னன்:** சிவன்

**நப்பின்னை:** நீளாதேவி

**'தென்னிந்திய வைணவம் – ஓர் அறிமுகம்'** நூலிலிருந்து

*(தொடரும்...)*

# தமிழ்த்தலைவன் கண்ட தாமரை உந்தியான்

ஸ்ரீ உ. வே. ஈ.தே . ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்த்ரபுரம், வைகுண்டவாஸீ

ஒவ்வொருவரும் தனக்குப் பிடித்தமான ஒரு பொருளையே சிந்தித்துப் பொழுதைப் போக்குவர். ஆனால் பரமனைக் கண்ட பரம பாகவதர்களோவென்னில் தாம் அப்பரம்பொருளுக்கு சேஷபூதரென்பதையும் அவனைக்கண்டு கேட்டுற்றுமோந்துண்டு அநுபவிப்பதற்கே தாம் இம்மண்ணுலகத்தில் அவதரித்திருப்பதையும் என்றென்றும் தம்மனத்தே கொண்ட சீர்மையை உடையோராதலின் என்றும் எங்கும் அந்த பரமபுருஷனுடையரோடு கூடிய நினைவேயாக, எல்லாமவனேயாக அநுபவித்து மகிழ்வர்.

அதிலும் ஸ்ரீ பெரியபிராட்டியாரோடு கூடிய ஸர்வேச்வரனைத் தாம் தம்முடனே ஒருசேரக் கண்டநுபவித்து, அவனை அப்படியே உலகத்திற்கு முதன்முத லாக மிகமிகத் தெளிவானமுறையில் காட்டியருளும் பரமோபகார பாகவதோத்தமர்கள் தங்களது கண்ணகத்தும், செவியகத்தும், வாயகத்தும், மனத்தகத்தும், உணர்வகத்தும் என்றும் மகிழ்ந்து இனிதுறைபவனான பரமபுருஷனைத் தாம் அநுபவிக்குந் துறைகளுக்கும் ஓர் ஒப்புமை காண்டலும், கேட்டலும், நினைத்தலும் மற்றெவர்க்கும் அரிதே. அவர்களுடைய அநுபவம் எந்தக் கற்பனைக்கும் எட்டாததே.

ஆனால் அவர்கள் தங்களது அநுபவத்தை மற்றையோரும் அறிந்து ஆனந்திக்க வேண்டுமென்ற பரமக்ருபையினால் அவைகளைத் தேன்கலந்த சிரஞ்ஜீவிப் பாசுரங்களின் மூலமாக அறிவிக்கும் பேருபகாரத்தன்மை அதனிலும் சீர்மை மிகுந்ததே. **ஏற்றி மனத்தெழில் ஞான விளக்கை இருளனைத்தும் மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு மாயனும் காணகில்லான்.** தமிழ்த்தலைவன் என்று போற்றப்படுபவரான பேயாழ்வார் எவ்வெவர் சிந்தைக்கும் எட்டாத கற்பனைகளைக் கடந்த தமது திவ்யாநுபவம் ஒன்றை நமக்கு அருளும் திருவாக்கைச் சிறிது ஆராய்வோம்:

*ஆங்கு மலரும் குவியுமாலுந்திவாய்*
*ஓங்கு கமலத்தினொண்போது – ஆங்கைத்*
*திகிரி சுடரென்றும் வெண்சங்கம் வானில்*
*பகருமதியென்றும் பார்த்து.*
(மூன்றாம் திருவந்தாதி – 67)

பாற்கடலில் பள்ளிகொண்டளுரும் பரந்தாமன் ஆழ்வாருடைய அகக்கண்ணுக்கு இலக்கானவாறே



அவர் அவனை அநுபவித்ததை வெளியிடும் பாசுரமிது. ஸர்வேச்வான் பாம்பணைமேல் பள்ளிகொள்ளும் திருக்கோலம் இடதுபுறம் மேலாகவும் வலதுபுறம் சற்றுத் தாழ்வாகவும் எங்கும் காணப்படுவதோர் விசேஷமாகும். ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வாரின் திருப் பாசுரத்திலும் இவ்வாறேயுள்ளது.

பேயாழ்வாருடைய திருக்கண்களுக்கு இலக்காகிய பகவான், ஓர் அத்விதீயமான பெருங்கடலெனவே காட்சியளிக்கிறார். அவருடைய திருவுந்தியிலுள்ளதும், அகில லோகங்களும் தோன்றுவதற்குக் காரணமுமான நாபீ கமலம் அக்கடலில் தோன்றியதோர் வாடாத நன்மணமறாத தாமரைப் பூவாகவே காட்சியளிக்கிறது. கடலோன் கைமிசைக் கண்வளர்பவனாகிய திருமாலினது திருமேனி கற்பகத்தின் வல்லி போன்ற அவனுடைய திருநாசி வழியே சென்று திரும்பி வரும் மூச்சுக்காற்றினால் சிறிது உயர்ந்து தணிகிறது. அதனால் ஏற்படும் அசைவு, கடலில் அலைகள் கொந்தளிப் பதைப் போலவே காண்கிறது. மேலும் அவனது திருமேனியின் கீழ்ப்புறத்தில் வலது திருக்கரத்தில் ஏந்திய திருச்சக்கரம் கோடி ஸூர்ய ப்ரகாசத்துடன்

திகழ்வது, அக்கட வில் உதித்தெழும் கதிரவனை யொத்துக் காண்கிறது.

அன்றியும் ஸர்வேச்வரனது திருமேனியில் திகழும் எண்ணிறந்த திருவாபரணங்கள் கடல் கொந்தளிக்கும் போது எழும்பினால் வெளியிடும் பலவித வர்ண ஜாலங்கள் போலும், கடலின் அடியிலுள்ள பலவித ரத்னங்கள் கொந்தளிப்பினால் மேலே எறியப்படுவன போன்றும் காணப்படுகின்றன. அங்குறையும் திருமகளும் அப்போதுதான் திருப்பாற்கடலினின்று தான் எழுந்தருளுவதுபோல் தோற்றமளிக்கிறாள். புருஷோத்தமனுடைய திருமேனி அவனுடைய மூச்சுக்காற்றினால் அசைவுறும் போது அவனுடைய திருவுந்தியிலுள்ள திருக்கமல மலரும் ஆடியசை கிறது. அந்த அசைவுகளில் திருவாழியாழ்வான் பக்கமாகச் சற்று திரும்பும்போது ஆதவன் உதிக் கையில் அவனைக் கண்டு மலரும் தாமரைப்பூப் போலவே நாபீ கமலமும் நன்றாக விகஸிக்கிறது.

ஆனால் ஆடுங்கடலினிடத்துள்ளதோர் தாமரை ஒரு நிலையில் நிற்குமோ? பிறகு அத்தாமரை மறு புறம் தலைசாய்க்கும்போது அங்கே ஸ்ரீபாஞ்ச ஜந்யத்தைப் பார்க்கிறது. பரமன் திருமேனியில் சிறிது மேற்புறமாக உள்ள இடது புஜத்தில் வீற்றிருக்கும் பாஞ்சஜந்யம் வானத்திடையில் தோன்றும் முழுமதியெனவே காண்கிறது. உடனே நாபீ கமலம் இரவு வந்து விட்டதெனக் கருதிக் கூம்புகிறது (மொட்டாகிவிடுகிறது.) அப்போது பரமனுடைய தோற்றம் கார்மேகம் நிறைந்த நீல நிறமான ஆகாயத்தைப்போலவும், திருமேனியில் ஒளி வீட்டு விளங்குந் திருவாபரணங்கள் அவ்வானத்தில் அங்கங்கே தோன்றும் நக்ஷத்ரங்கள், க்ரஹங்கள் போலவும், அகல் மார்பிலுறைகின்ற ஸ்ரீதேவி மேகத்திடை கொடிமின்னல் போலவும், திருவாழியாழ்வான் சுழி மின்னலைப் போலவும்



வெண்சங்கு முழுமதி போலவும் தோற்றுகின்றன.

மேகம் நிறைந்த ஆகாயத்தில் முழுமதியும் நக்ஷத்ரங்களும் எங்கே காணக்கிடைக்குமெனின் ஜ்ஞாநக் களஞ்சியமாகிய ஆழ்வாருடைய திருநோக்கங்களுக்கு இலக்காகியவை ப்ராக்ருத மானவையல்லவே? அவை அப்ராக்ருதமும், அத்விதீயமும், அநிதரஸாதாரணமும் ஆனவை யன்றோ! ஆதலின் பாஞ்சஜந்யத்தைக் கண்ட உந்தித் தாமரையும் இரவு வந்ததெனக் கருதிக் கூம்பினமையும் ஆழ்வாருக்கு இலக்காகியது.

குளிர்ந்த நிறத்தாலும், குறையாத தன்மையாலும், அளவு காணமுடியாத கம்பீரத்தினாலும் கருங் கடலையும் கண்டவுடன் உலகத்திற்கு ஆநந்தத்தை அளித்து ப்ரதியுபகாரத்தை நோக்காமல் க்ருபையுடன் வர்ஷிக்கும் தன்மையினால் காளமேகத்தையும் ஒக்கும் திருமாலினது திருமேனியின் தன்மையை உள்ளபடியறிந்த ஆழ்வார் தமது அநுபவத்தைச் சித்திரிக்கும் முறை தான் என்னே ஆச்சரியம்!

அன்றியும் இப்பாசுரத்திற்கு உள்ளுறை பொருளாக இப்படியுமாழ்வார் திருவுள்மெனப் பெரியோர் பணிப்பர். அதாவது, **மாலுந்திவாய் ஒங்கு கமலத்தின் ஒண்போது** என்பது ஸர்வேச்வானிடம் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களும் என்றும் அவனை விட்டு நீங்காதவர்களுமாகிய பாகவதர்கள். உலகங்களைப்படைக்க உந்திக்கமலத்தைத் தோற்றுவித்ததுபோலவே தனது விபூதியெல்லாம் செழித்து வாழ்வு பெறவே பாகவதோத்தமர்களைத் தோற்றுவித்தான் பரமன். அவர்கள் என்றும் சிறப்போங்கியவர்கள். இளமையும், வாஸனையும் என்றும் மாறாத பூம்போது போலவே கௌரவிக்கத் தக்கவர்கள்.

மநஸ் தத்வத்தின் அதிஷ்டானதேவதையாகிய திருவாழியாழ்வானை அவர்கள் ஸேவித்த மாத்திரத்தில் ஸூர்யனைக் கண்ட தாமரைபோல் தமது மனமும் ஜ்ஞாநமும் நன்றாக விகஸிக்கப் பெறுகிறார்கள். ஸாத்விக அஹங்கார தத்வத்தின் அதிஷ்டான தேவதையாகிய ஸ்ரீபாஞ்சஜந்யத்தை ஸேவித்த மாத்ரத்தில் சுத்த ஸத்வ குணம் மேலிட்டு பகவத்யாநத்தில் ஈடுபட்டு அவனுடன் மனம் லயித்து ஒடுங்குகிறார்கள் என்பதே. என்றுமே இருட்டுக்குச் சிறிதும் அவகாசமில்லாத பரமபுருஷனுடைய திவ்ய ஸ்வரூபத்தில் பகலும் இரவும் சிறிதுபோழ்தில் மாறிமாறி வருவதுபோன்ற அநுபவத்தையடைந்து நமக்கும் அதையருளுவது செப்பரும்தகைத்தன்றோ? தமிழ்த்தலைவன் சுரங்கத்து மாணிக்கங்களில் இதுவும் ஒன்றாகும்.

ஸ்ரீ:

# தேசிகனின் தென்மொழியும் தேன் சுவையும்

Dr. ஸ்ரீமதி ஹேமா ராஜகோபாலன், பெங்களூரு

அணிஅழுந்தூர் **நின்றுகந்த** அமரர்கோன் ஸ்ரீ ஆமருவியப்பனைப் பாடுங்கால் ஸ்ரீ திருமங்கை ஆழ்வார் அவ்வூர் வாழ் அந்தணர்களை **நமக்கு மிக அழகாக அறிமுகப்படுத்துகிறார்!**

*…செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்*
*திசைமுகனே அனையவர்கள் செம்மை மிக்க*
*அந்தணர் தம் ஆகுதியின் புகையார் செல்வத்து*
*அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே.*
(பெரிய திருமொழி 7-8-7)

இத்திருத்தலம் வாழ் அந்தணர்கள் உபய வேதாந்த ஜ்ஞானத்துடன் அவ்வேதம் கூறும் வேள்விகளைச் செய்துகொண்டு வாழ்ந்திருந்ததாக இப்பாசுரத்தில் பேசுகிறார்! வேதமே எனக்குக் கண்கள் என்றும் வேதமே தனக்கு செல்வமென்றும் பேசும் நான்முகனுக்கு ஒப்பானவர்கள் என்றும் அந்நான்மறையாளர்களைப் பாராட்டுகிறார்! இக்கூற்று நம் ஆசார்யோத்தமரான ஸ்வாமி தேசிகனுக்கும் பொருந்தும்! கலியனுரையில் குடிகொண்ட கருத்துடையோனாக மட்டுமின்றி கலியனின் உரையிலும் இவர் குடிகொண்டிருப்பதை இவ்விடத்தில் நம்மால் காணமுடிகிறது! வேதாந்தவாசிரியனாக விளங்கியதுடன் வடமொழி, தமிழ் என இருமொழிகளிலும் கவி பாடவல்ல வித்தகன் வேதியன் அவர்!

சந்தமிகு தமிழ்மறையோன் என்று தம்மைப் பெருமையுடன் கூறிக் கொள்ளும் இவருடைய தமிழ் படைப்புகளில் காணப்படும் இவரது மொழி ஆளுமை கற்போரை களிக்கச் செய்வதுடன் வியக்கவும் செய்ய வல்லவை! தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுத்தேர்ந்திருந்தார் என்பதை இவர் ஆழ்வார்களின் 4,000 பாசுரங்களையும் 400 பாசுரங்களாகப் பாடி (தேசிக ப்ரபந்த பாசுரங்கள்) அருளியதில் கண்டு மகிழலாம்!

'அவசியமான அர்த்தங்களை எல்லாம் சிறிய கண்ணாடி பெரிய உருக்களைக் காட்டுமாப்போலே சுருங்கத் தெளிவிக்கும் திருமந்த்ரம்' என்று இவர் திருமந்த்ரத்துக்கு அருளிச்செய்த உதாரணம் இவருடைய ப்ரபந்தத்துக்கும் பொருந்துமன்றோ!

வெள்ளைப் பரிமுகனாகிய எம்பெருமான் வேத, வேதாந்த மற்றும் பல சாஸ்த்ராதி விஷயங்களை எல்லாம் தம் உள்ளத்தில் எழுதியதாக



அருளிச்செய்யும் ஸ்வாமி தேசிகன், மறைகளில் மறைந்துள்ள மறைப்பொருள்களை எல்லாம் மக்களாகிய நமக்குத் தெளிவாக்குவதற்காக, ஆழ்வார்களாக, 'அபிநவமான ஒரு தசாவதாரம்' என்னலாம் படி அந்த எம்பெருமானே அவதரித்தார் என்று ஸாதிக்கிறார்!

ஆழ்வார்கள் பாலும் அவர்களது அருளிச் செயல்களின் பாலும் அளவற்ற பற்று கொண்டிருந்தார் நம் தூப்புல் வள்ளல். **மாசில் மனந்தெளி முநிவர் வகுத்தவெல்லாம் மால் உகந்த ஆசிரியர் வார்த்தைக்கொவ்வா** என்பது இவர் கூற்று! எம்பெருமானால் மயர்வற மதிநலம் அருளப்பட்ட ஆழ்வார்களின் வாக்கு அருந் தவமியற்றிய, மனத்தெளிவையுடைய மஹர்ஷிகளின் வாக்கு களைக் காட்டிலும் உயர்ந்தது என்கிறார்!

உயர்ந்த கவிகளின் பாக்களில் புறநிலைப் பொருளுடன் உள்ளுறைப் பொருளையும் காணலாம் என்பது ஆன்றோர் வாக்கு! **தேனில்லா மலரில்லை! தேடி அறிந்தால் சுவைக்கலாம்** என்பர்! அதற்கிணங்க ஸ்வாமி தேசிகனின் பாக்களும் அமைந்துள்ளன என்பதைக் காட்ட ஒரு சோறு பதமாக ஒரு பாசுரம் இதோ!

ஸ்ரீ:

*ஒண்டொடியாள் திருமகளும் தானுமாகி*
*ஒரு நினைவால் ஈன்ற உயிரெல்லாம் உய்ய*
*வண் துவரை நகர் வாழ் வசுதேவற்காய்*
*மன்னவற்குத் தேர்ப்பாகனாகி நின்ற*
*தண் துளவ மலர்மார்பன் தானே சொன்ன*
*தனித்தருமம் தான் எமக்காய்த் தன்னைஎன்றும்*
*கண்டு களித்து அடிசூட விலக்காய் நின்ற*
*கண்புதையல் விளையாட்டைக் களிக்கின்றானே.*

இப்பாசுரத்தில் எம்பெருமானை தண்துளவ மலர்மார்பன் என்று காட்டுகிறார்! இதற்கு 'குளிர்ந்த திருத் துழாய் மலர்மாலை அணிந்த திருமார்பன்' என்பது புறப் பொருளாகிறது. தண் மார்பன், துளவ மாலை மார்பன், துளவமலர் மாலை மார்பன், துளவமும், மலர் மாலையும் திருமார்பில் அணிந்தவன் என்று பலபடியாகப் பிரித்துப் பொருள் கொள்ளலாம். இனி இதன் உள்ளுறைப் பொருளைக் காண்போம். திருமார்பில் இணையும் தண் என்னும் சொல் அகலகில்லேன் இறையும் என்று ஆங்கே எழுந்தருளியிருக்கும் பிராட்டியைக் குறிக்கும்! துளவ என்னும் சொல் அதாவது துளவுதல் என்பது அங்கே துழாவி, இருளில் தேடி என்று பொருளாகிறது!

அடுத்து மலர் என்னும் சொல் விரிதல், தோன்றுதல், ஸ்புரித்தல், விளங்குதல் என்று பல பொருள்களைத் தரும். எனவே இருளில் துழாவியபோது தோன்றியது எதுவோ அது திரு என்று பாடப்பட்டது! ஆக இந்நிகழ்வு அன்றோர் நன்நாளில் ஆழ்வார்கள் மூவரும் ஆயனாரைக் அக்கோவலூர் இடைகழியில் கண்டு ஆழங்காற்பட்டுப் பாடிய அபூர்வ நிகழ்வன்றோ!

எம்பெருமானைக் காட்டும் ச்ருதி முதலிய ப்ரமாணங்களைத் துழாவி ஆராய்ந்தால் நாம் தெளியும் மெய்ப்பொருளைக் கண்ணெதிரில் கண்டு, கரை புரண்ட களிப்பும் கருணையுமே காரணமாக ஆங்கே தொடங்கப்பட்டதே நம் சந்தமிகு தமிழ்மறை என்பதை இப்பாசுரத்தின் உள்ளுரையாக உணர்ந்து மகிழலாம்!

திருக்கண்டேன் எனப்பாடி நெருக்குகந்த இப்பெருமானின் ஸௌலப்ய ஸௌசீல்யாதி குணங்களைக் காட்டவே பாசுரத்தில் பார்த்தனுக்குத் தேர்ப் பாகனாகி நின்றதைப் பாடுகிறார்! கருத்தொருமித்த இந்த திவ்ய தம்பதி ஒரு நினைவாலே ஈன்றனர்; ஈன்ற உயிர்களனைத்தும் உய்யவும் எண்ணினர்! அதைக் குறிக்கவே தண் துளவ மலர் மார்பனென்றும் அவர் தானே சொன்ன தனித்தருமம் என்றும் சரணாகதியாகிய உயர்ந்த உபாயத்தையும் பாடுகிறார்!

**மேலும் நின்னுடன் சேர்ந்து நிற்கும் நின் திருவே** என்று பிறிதோரிடத்தில் பாடியபடி இத்திருவின் இணைவே இப்பெருமானை உயர்வற உயர்நலமுடைய தண்திருமார்பனாகவும் விளங்கச் செய்தது என்பதும் மலருக்குள் மறைந்திருக்கும் மது போல் உள்ளுறையில் ஒலிக்கும் பொருள் என்பதை சுவைத்து மகிழலாம்!







## ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்







ஸ்ரீ:




ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்






## ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்







ஸ்ரீ:





**ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்**











ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்















ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்














## ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்









## ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்







கண்ணுக்கினியன



## ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்













ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்











நவராத்ரி உத்ஸவம்













ஸ்ரீ:





**நவராத்ரி - விஜயதசமி உத்ஸவம்**







**அபிஷேக் ரகுராம் குழுவினர் இன்னிசை**

ஸ்ரீ:

கண்ணுக்கினியன





## திருப்பவித்ர உத்ஸவம்







ஸ்ரீ:





## திருப்பவித்ர உத்ஸவம்













திருப்பவித்ர உத்ஸவம்







கண்ணுக்கினியன





## திருப்பவித்ர உத்ஸவம்













ஸ்ரீ:

# க்ரோதமும் ரக்ஷணமே

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

*காமம் யாவையும் தருவதும் அப் பதம் கடந்தால்*
*சேம வீடு உறச் செய்வதும் செந்தழல் முகந்த*
*ஓம வேள்வியின் உறு பதம் உய்ப்பதும் ஒருவன்*
*நாமம் அன்னது கேள் நமோ நாராயணாய!*
(கம்பராமாயணம் - யுத்த காண்டம் - இரணிய வதைப் படலம் - 42)

ஸ்ரீரங்கத்தில் பெரிய பிராட்டி ஸந்நிதி எதிரில் சாந்த ஸ்வரூபியான ஸ்ரீராமனின் காதையினை அரங்கேற்றும் ஸமயத்தில், மஹா உக்ர ரூபியான ந்ருஸிம்ஹனால் ஆகர்ஷிக்கப்பட்ட கம்பநாட்டாழ்வானின் வரிகள் இவை. அஷ்டாக்ஷரத்தின் ஏற்றம் கூறும் இந்த வரிகள் **'காமம்'** என்ற பதத்துடன் தொடங்குவது கவனிக்கத் தக்கது. **மற்றை நம் காமங்கள் மாற்று** (திருப்பாவை - 29) என்கிறாள் கோதை நாச்சியார். **சேமநல் வீடும், பொருளும், தருமமும், சீரியநல் காமமும் என்று இவை நான்கு என்பர் நான்கினும் கண்ணனுக்கே ஆம் அது காமம்** (ராமானுஜ நூற்றந்தாதி - 40) என்கிறார் திருவரங்கத்தமுதனார்.

காமம் இரண்டு வகைப்படும். ரஜோ குணத்தினால் உண்டாகும் காமமானது செல்வம், ஆபரணம், நிலம், வாஹனம், ஜனம் போன்ற அநித்யமான விஷயங்கள் மீது பற்று கொள்ளச் செய்யும். ஸத்வ குணத்தினால் உண்டாகும் காமமானது பகவத் பக்தியினை உண்டு பண்ணி பாகவத ஸம்ச்லேஷத்தின் மூலம் சாச்வதமான நிலையினை அநுக்ரஹிக்கும். மேலே சொல்லப்பட்ட பதங்கள் ஸத்வ குணத்தினால் உண்டாகும் காமத்தினைக் குறித்த அபேக்ஷிதங்கள்.



காமத்தினைப் போன்றே க்ரோதமும் இரண்டு வகைப்படும் (கோபம் என்பதற்கான ஸம்ஸ்க்ருதச் சொல் க்ரோதம்). சாஸ்த்ர ஸம்பந்தமான விஷயங்களில் உண்டாகும் கோபம் தோஷமாகிறது. ஸாஸ்த்ர விருத்தமான விஷயங்களில் உண்டாகும் கோபம் குணமாகிறது.

### ஆழ்வார்கள் ரசித்த க்ரோதமெனும் குணம்

எம்பெருமானது குணங்களில் ஆழ்வார்கள் அநுபவித்த க்ரோதமென்ற திருக்கல்யாண குணத்தின் அழகினை அவர்களது பாசுரங்களை ஸேவித்து நாமும் ரசிப்போம்.

### க்ரோதம் திருக்கல்யாண குணம்

*மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்*
*சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து*
*வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துஉதறி*
*மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்*
*போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணா உன்*
*கோயில்நின்று இங்ஙனே போந்தருளி கோப்புடைய*
*சீரிய சிங்காசனத்திருந்து யாம்வந்த காரியம்*
*ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்*
(திருப்பாவை - 23)

மழைக்காலத்தே தனது துணையுடன் கூடிக் களித்திருக்கும் ஸிம்ஹமானது துயிலெழுந்து தனது பிடரி மயிரினை உதறிக் கொண்டு கம்பீரமாகத் தனது இருப்பிடத்தினை விட்டு வெளியில் வருவது போலே ஸ்ரீக்ருஷ்ணனை அந்தப்புரத்திலிருந்து வெளியே வரச் சொல்கிறாள் நாச்சியார். அடங்கவொண்ணாத சினத்துடன் கம்பீரமாக வெளிவரும் கோலத்தில் ஸ்ரீக்ருஷ்ணனை ஸேவிக்க வேண்டுமென்ற தனது அபேக்ஷயினை வெளிப்படுத்துவதோடு, ந்ருஸிம்ஹனாக எம்பெருமான் கொண்ட க்ரோதத்தின் அழகினையும் இந்தப் பாசுரத்தின் மூலம் நமக்குப் விளக்குகிறாள் பெரியாழ்வார் புத்ரி. கண்ணுக்கினியனான ஸ்ரீக்ருஷ்ணன் ந்ருஸிம்ஹனைப் போல உக்ர ரூபியாக ஸேவை ஸாதித்தால் எப்படி இருப்பான்? ஆஹா௱ என்னே கோதையின் ரஸனை!

### க்ரோத ரூபம் வசீகரம்

கருடாரூடனாக ஸேவை ஸாதித்த தனது நாயகனுக்கு ஈடுயிணையில்லாத வாஞ்சையுடன் திருப்பல்லாண்டு பாடும் நேரத்திலும் கூட **அந்தியம்போதில் அரியுருவாகி அரியை அழித்தவனை** (பெரியாழ்வார் திருமொழி 1-1-6) என்று ஸேவித்து க்ரோதத்தின் மொத்த

உருவமாக இருந்த ந்ருஸிம்ஹனைப் போற்றுகிறார் விஷ்ணுசித்தர். சாந்த ஸ்வரூபியாக எம்பெருமான் தன் கண்ணெதிரில் இருந்த போதும் கூட அவனது க்ரோதம் மிகுந்த ரூபம் பெரியாழ்வாரை வசீகரித்து ஆட்கொண்டது என்பதற்கு இந்தப் பாசுர வரிகளே சான்று.

**விபவம் தோறும் க்ரோதம்**

ஸ்ரீக்ருஷ்ணனின் அன்னையாம் யசோதையின் பாவத்தினைக் கொண்டு சின்னஞ்சிறு குழந்தையை சீராட்டி வளர்க்கும் ப்ரகரணத்திலும் கூட **பேய்ச்சி முலை சுவைத்துண்டிட்டு உறங்குவான் போலே கிடந்த இப்பிள்ளை மறங்கொள் இரணியன் மார்பை முன் கீண்டான்** என்று இரண்டு வ்ருத்தாந்தங்களினை ஒரு சேரக் காண்பித்து, இரண்டிலும் அவனது க்ரோதத்தினைக் கொண்டாடி, அதன் பின்னரே அவன் உறங்கும் அழகினைப் பார்க்க ஆயர்பாடியினரை அழைக்கிறார் ஆழ்வார் (பெரியாழ்வார் திருமொழி 1-3-5).

**க்ரோதம் அநுக்ரஹம்**

யசோதை பாவத்தில் பெரியாழ்வார் ஸ்ரீக்ருஷ்ணனை செங்கீரை ஆடச் சொல்லும் ப்ரகரணத்திலும் **கோளரியின் உருவம் கொண்டு அவுணனுடலம் குருதி குழம்பியெழக் கூருகிரால் குடைவாய் மீள** (பெரியாழ்வார் திருமொழி 1-6-2) என்று ந்ருஸிம்ஹனின் க்ரோதத் தினால் விளைந்த நற்பயனைச் சுட்டிக் காட்டுகிறார்.

**க்ரோதம் பேரழகு**

யசோதையாகத் தன்னை பாவித்து ஸ்ரீக்ருஷ்ண னிடம் சப்பாணி கொட்டச் சொல்லும் போதும் **ஆங்கே வளர்ந்திட்டு வாளுகிர்ச் சிங்க உருவாய் உளந்தொட்டி ரணியன் ஒண்மார்வகலம் பிளந்திட்ட கைகளால்** சப்பாணி கொட்டு என்று ஸேவித்து, ஹிரண்யனை வதைக்க க்ரோதம் கொண்ட ந்ருஸிம்ஹனின் ஹஸ்த அழகினைக் கொண்டாடுகிறார் (பெரியாழ்வார் திருமொழி 1-7-9).

**வல்லெயிற்றுக் கேழலுமாய் வாளெயிற்றுச் சீயமுமாய் எல்லையில்லாத் தரணியையும் அவுணனையும் இடந்தான்** (பெரியாழ்வார் திருமொழி 4-8-8) என்றதன் மூலம் அடக்குவாரற்ற க்ரோதமானது அவனது திருமேனி அழகிற்கு மேலும் அழகினை சேர்த்தது என்கிறார்.



**க்ரோதம் தர்ம பரிபாலனம்**

**உரம் பற்றி இரணியனை உகிர்நுதியால் ஒள்ளிய மார்புறைக்க ஊன்றி சிரம் பற்றி முடியிடியக் கண் பிதுங்க வாயலரத்தெழித்தான்** (பெரியாழ்வார் திருமொழி 4-9-8) என்றும், யசோதையாகத் தன்னை வரித்துக் கொண்டு ஸ்ரீக்ருஷ்ணனைப் பூச்சூட அழைத்த போதில், **இடந்திட்டு இரணியன் நெஞ்சை இரு பிளவாக முன் கீண்டாய்** (பெரியாழ்வார் திருமொழி 2-7-7) என்றும் ஸேவித்து, ந்ருஸிம்ஹன் கொண்ட மட்டற்ற க்ரோதத்தினையும், அதன் மூலம் அவன் தர்ம பரிபாலனம் செய்ததையும் காண்பிக்கிறார். **யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி** – தர்மத்திற்கு ஹாநி ஏற்படும் போதெல்லாம் நான் அவதரிப்பேன் என்ற கீதா வாக்யம் இங்கு அநுஸந்திக்கத் தக்கது.

**க்ரோதம் ஆச்சர்யம்**

**அதிரும் கழல் பொரு தோள் இரணியன் ஆகம் பிளந்து அரியாய் உதிரம் அளைந்த கையோடிருந்தானை உள்ளவா கண்டாருளர்** (பெரியாழ்வார் திருமொழி 4-1-1) என்றுரைத்து எம்பெருமானின் க்ரோத ரூபத்தினைக் கண்டவர் தான் எவரோ என அதிசயிக்கிறார். அநாச்ரிதற்கு அச்சத்தினை (ம்ருத்யு பயம்) உண்டாக்கும் எம்பெருமானின் க்ரோதம், ஆச்ரிதருக்கு அக்காரக்கனி போல் இருப்பது ஆச்சர்யம் தானே.

ந்ருஸிம்ஹாவதாரத்தில் எம்பெருமானின் கோப மென்னும் பெருங்குணத்தினில் பெரியாழ்வார் பல விதமாக அந்வயித்த அழகினை அநுபவித்தோம்.

**க்ரோதம் ஸந்தோஷம்**

திருமழிசை ஆழ்வார் **திரண்ட தோள் இரணியன் சினங்கொள் ஆகம் ஒன்றையும் இரண்டு கூறு செய்துகந்த சிங்கம்** (திருச்சந்த விருத்தம் - 62) என்றுரைத்து, எம்பெருமானது கோபத்தின் பலன் அவனுக்கே உகப்பாக இருந்ததை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்.

**க்ரோதம் மதி மயக்கம்**

ஸ்ரீரங்கநாதனைத் தவிர வேறெந்த திவ்யதேச எம்பெருமானையும் பாடாத திருப்பாணாழ்வார், **பரியனாகி வந்த அவுணன் உடல் கீண்ட** (அமலனாதி பிரான் - 8) என்று பாசுரத்தினைத் தொடங்கி, தனது அகக் கண்களால் ந்ருஸிம்ஹனின் கோபத்தினை முதலில் ரஸித்த பின்னரே ஸ்ரீரங்கநாதனின் **நீண்ட அப்பெரிய வாய கண்கள் என்னைப் பேதைமை செய்தனவே** என்று அரங்கனின் அழகில் உருகுகிறார்.

**க்ரோதம் விரோதி நிரஸனம்**

எம்பெருமான் க்ரோதம் கொண்ட கஜேந்த்ர ஸம்ரக்ஷண ப்ரகரணத்தினை முன்னிறுத்தி, பெரிய முதலையினை சீற்றமெனும் பெருங்குணம் கொண்டு நிரஸனம் செய்தது போலே தனது எதிரிகளையும் அழித்துத் தன்னை ரக்ஷிக்குமாறு திருமங்கை மன்னன் ப்ரார்த்திக்கும் பாசுரமிது.

*கடிகொள் பூம்பொழில் காமரு பொய்கை*
*வைகு தாமரை வாங்கிய வேழம்*
*முடியும் வண்ணமோர் முழுவலி முதலை பற்ற*
*மற்றது நின்சரண் நினைப்ப*
*கொடியவாய் விலங்கின்னுயிர் மலங்கக்*
*கொண்ட சீற்றமொன்றுண்டுள தறிந்துன்*
*அடியனேனும் வந்தடியிணை யடைந்தேன்*
*அணிபொழில் திருவரங்கத்தம்மானே.*
(பெரிய திருமொழி 5-8-3)

**சீற்றமொன்றுண்டுளதறிந்துன் அடியனேனும் வந்தடியிணை யடைந்தேன்** - எம்பெருமானைக் **'கோபம் கொள்'** என்று ஆழ்வார் விண்ணப்பிப்பதாய் அமைந்த இந்த வரிகளில், அவனுக்கு சீற்றம் (க்ரோதம்) என்றொரு குணம் இருப்பதை அறிந்தே தான் அவனடி பணிந்ததாகக் கூறுகிறார்.

கஜேந்திரனுக்கு விரோதி ஒரே ஒரு முதலை. ஸம்ஸாரிகளுக்கு விரோதிகளாவன பஞ்சேந்த்ரியங்கள்.

கஜேந்த்ரன் முதலையினால் நோவு கண்டது ஆயிரம் தேவ வர்ஷங்கள்.

ஸம்ஸாரிகள் கர்மாக்களினால் ஜன்மம் எனும் நோவு காண்பது அநாதி காலம்.

கஜேந்த்ரன் முதலையிடம் மாட்டிக் கொண்டது ஒரு சிறு குட்டையிலே.

ஸம்ஸாரிகள் கர்மாக்களினால் மூழ்குவது ஸம்ஸாரமெனும் மஹா ஸமுத்ரத்தினில்.

கஜேந்த்ரனை விட ஆச்ரித ஸம்ஸாரிகளுக்கு விரோதிகள் அதிகம் என்பதனால், முன்னவனுக்காகக் கொண்ட சீற்றத்தினை விட பின்னவர்களுக்காக எம்பெருமான் அதிக சீற்றம் கொள்ள வேண்டியுள்ளது என்பது நிதர்சனம். இதன்படி பார்த்தால், பக்த ரக்ஷணத்திற்காகவும் தர்ம பரிபாலனத்திற்காகவும் அவன் கொள்ளும் க்ரோதம் அவனது திருக்கல்யாண குணங்கள் அனைத்திலும் தலையாயதாகின்றது.

திருமங்கை மன்னன் கொண்டாடும் எம்பெருமானின் இந்த சீற்றமெனும் திருக்கல்யாண குணத்தினைக் கொண்டாடி, இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பகவானின் ஸ்ரீபாத தூளியாகவே வர்திப்பதென்பது கிடைத்தற்கரிய வரம்.

**ஆச்ரிதர்களிடத்தும் அவன் க்ரோதம் கொள்வானா?**

அநாச்ரிதர்கள் மீது மட்டும் தான் எம்பெருமான் க்ரோதம் கொள்வானா எனில், இதற்கான விடையினை அவனே தனது திருவாய் மலர்ந்தருளுகிறான்.

**ச்ருதி: ஸ்ம்ருதி: மமைவாஜ்ஞா ஆஜ்ஞா சேதீ மம த்ரோஹீ** (கீதா வாக்யம்). ச்ருதி, ஸ்ம்ருதிகள் என்னுடைய கட்டளைகள். கட்டாயம் செய்ய வேண்டியவை (ஆஜ்ஞா கைங்கர்யங்கள்) என்று நான் கூறியவற்றை செய்யாது, செய்யக் கூடாது என்று நான் வரையறுத்தவைகளை (சாஸ்த்ர விரோதமான விஷயங்கள்) செய்வோர், ஆச்ரிதர்களாகவே இருப்பினும் என் ஆஜ்ஞையை மீறுபவர்கள் என்பதால் அவர்களை த்ரோகிகளாகவே கருதுவேன் என்கிறான் கீதாசார்யன்.

*அழகியான் தானே அரியுருவன் தானே*
*பழகியான் தாளே பணிமின் - குழவியாய்த்*
*தான் ஏழுலகுக்கும் தன்மைக்கும் தன்மையனே*
*மீன்ஆய் உயிர்அளிக்கும் வித்து.*
(நான்முகன் திருவந்தாதி – 22)

ஸப்த லோகங்களுக்கும் உபாதாந காரணமாய் இருப்பவனும், ப்ரளய காலத்தே ஆலிலையில் ஒரு சிறு குழந்தையின் வடிவம் கொள்பவனும், பின் மத்ஸ்ய ரூபியாய் உருவெடுத்து ஜகத்தினை ரக்ஷிப்பவனுமான பகவான், ந்ருஸிம்ஹனாய் அவதரித்த போதிலே கொண்ட ரூபம் அழகானது என்கிறார் திருமழிசைப்பிரான். பக்த ரக்ஷணத்திற்கென க்ரோதம் மிகுந்த விசித்ரமான ரூபம் கொண்ட அழகியசிங்கனின் திருவடி பணிந்து, அவனிட்ட கட்டளைகளை செவ்வனே செய்ய அநுக்ரஹிக்குமாறு அவனிடமே ப்ரார்த்திப்போம்.

## ஐப்பசியில் முக்கிய உத்ஸவங்கள்

| |
|---|
| **தீபாவளி உத்ஸவம்**<br>அக்டோபர் 20 (திங்கள்) |
| **அன்னகூட உத்ஸவம்**<br>அக்டோபர் 22 (புதன்) |
| **பேயாழ்வார் உத்ஸவம் (10 நாட்கள்)**<br>அக்டோபர் 23 (வியாழன்) முதல்<br>நவம்பர் 1 (சனி) வரை |
| **ஸேனைநாதன் திருநக்ஷத்ரம்**<br>அக்டோபர் 28 (செவ்வாய்) |
| **ஸ்ரீ தேசிகன் 27-ம் நாள் விடாயாற்றி உத்ஸவம்**<br>அக்டோபர் 29 (புதன்) |
| **பொய்கையாழ்வார் திருநக்ஷத்ரம்**<br>அக்டோபர் 30 (வியாழன்) |
| **பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்**<br>அக்டோபர் 31 (வெள்ளி) |
| **பேயாழ்வார் திருநக்ஷத்ரம்**<br>நவம்பர் 1 (சனி) |

ஸ்ரீ:

# திருவரங்கனின் அபயஹஸ்தம் எதனைக் குறிக்கிறது?

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

திருமலையப்பனின் வலது திருக்கை அமைப்பானது **மாம் ஏகம் சரணம் வ்ரஜ** என்று அவன் திருவடிகளை நமக்குக் காட்டுகிறது. இதன் மூலமாக தன் திருவடிகளே உபாயம் என்று தானே வெளியிட்டருளி, அவற்றில் சரண் புகுமாறு சேதனர்களை அவன் விதிப்பது ஸித்தம். பேரருளாளனது வலது திருக்கையின் அமைப்போ 'என்னிடத்தில் ஒருகால் ப்ரபத்தி செய்தாலே போதுமானது. நீ வேண்டியவற்றையெல்லாம் **என்ன வரம் தர?** என்று ஒருவன் கருதிய வரங்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் அளிப்பதைக் காட்டுகிறது. இவ்விரு அர்ச்சா மூர்த்திகளின் ஹஸ்தங்களும் முறையே சரணாகதியே மோக்ஷத் திற்கான சிறந்த உபாயம் என்றும் அந்தச் சரணாகதியை அநுஷ்டிக்க அந்தணர், அந்தியர், எல்லையில் நின்ற அனைத்துலகும் நொந்தவர் என அனைவரும் உரியவர்களே என்றும், அப்படி சரண் புகுந்தவர்கள் விரும்பிய அனைத்தையும் அள்ளியள்ளிக் கொடுப்பதற்காகவே சரண்யன் ஸித்தமாக இருக்கிறான் என்பதனைக் காட்டுகிறது.

இப்படியிருக்க திருவரங்கத்தில் வீற்றிருக்கும் நம்பெருமாளின் திருக்கை அமைப்பு எதனைக் குறிக்கிறது? ஸ்வாமி தேசிகன் அத்யத்புதமாக ஸாதிக்கிறார்:

*ப்ராய: ப்ரபதநே பும்ஸாம் பௌந:புந்யம் நிவாரயந் ।*
*ஹஸ்த ஸ்ரீரங்க பர்த்து: மாம் அவ்யாத் அபயமுத்ரித:॥*
(ஸ்ரீ ந்யாஸ திலகம் - 2)

திருவரங்கனது வலது திருக்கையின் திருவிரல்கள் அனைத்தும் மேல்நோக்கியும், உள்ளங்கை ஸேவிப்பவர்களை நோக்கியும் இருக்கிறது. இதற்கு 'அபய ஹஸ்தம்' என்று பெயர். தன்னை வழிபடும் சேதனர்களை 'அஞ்சேல்' - பயம் வேண்டாம் என்று பெருமாள் அறிவுறுத்துவது போலுள்ளது இவ்வமைப்பு.

அபயம் என்பதற்கு பயம் இல்லாமல் இருப்பது என்பது பொதுவான அர்த்தம். அபயம் என்றவுடன் நம் எல்லோருக்கும் நினைவில் வருவது சக்ரவர்த்தித் திருமகனான ஸ்ரீராமன் நிகழ்த்திக் காட்டிய சரணாகத-ரக்ஷண வ்ரதம் தான். துஷ்டனான ராவணனுக்குத் தம்பியான விபீஷணன் அந்த ராவணன் ஜனஸ்தானத்தில் ஜடாயுவைக் கொன்று, சீதையை அபஹரித்து, இலங்கையில் சிறை வைத்திருக்க, அவளோ இரவும் பகலும் ராமனையே நினைத்து உருகுகின்றனள். சீதையை ராமனுக்குத் திருப்பிக்கொடுத்து விடு என்று விபீஷணன் அவனுக்குப் பல நியாயமான வார்த்தைகளால்



தெரிவித்தும் அவன் காலனால் தூண்டப்பட்டு அவன் வார்த்தையை ஏற்றுக் கொள்ளவில்லை. மேலுமவன் விபீஷணனை வெறுத்து விரட்டிவிட்டனன். ஆகையால் தஞ்சமென்று அடைந்தவனை அஞ்சேல் என்று அபயமளிக்கும் தன்மையனான இராமன் எவர் என்ன சொன்ன போதிலும் ரக்ஷிக்காமல் இருக்கமாட்டான் என்று தன் நான்கு மந்த்ரிகளுடன் ராமனை சரணம் புகுந்தான் விபீஷணன். 'ராமா! ராவணனது தம்பியான நான் அவனால் அவமதிக்கப்பட்ட படியால் ஸர்வலோக சரண்யனான உன்னைச் சரணமடைந்தேன். நான் இலங்கையிலுள்ள எனது மனைவி மக்களையும், ஐச்வர்யங்களையும் விட்டு நீயே கதியென்று வந்தவன். இனி என் ஜீவன் உனதே' என்றான்.

ராம-லக்ஷ்மணர்கள் மேல் மிகுந்த ப்ரீதி கொண்ட ஸுக்ரீவன் விபீஷணனின் வருகை கண்டு அவனால் அவர்களுக்கு ஏதேனும் துன்பம் நேருமோ என்றஞ்சி, 'இவன் நான்கு ராக்ஷஸர்களுடன் ஸமஸ்த ஆயுதங்களையும் தரித்து வந்திருக்கிறான். ராமா! இவன் உன்னைச் சரணமடைந்தவனாயினும் நம்பத் தகுந்தவனல்லன். இவன் ராவணனிடமிருந்து வந்திருப்பதால் இவனிடம் நம்பிக்கை வைக்கலாகாது. இவன் ராவணனால் அனுப்பப்பட்ட வேவுகாரனாக

இருக்கக் கூடும். இவர்கள் தங்கள் சொந்தப் பெயர்களையும் ஸ்வருபத்தையும் மறைத்து நம்மிடம் இனிமையாகப் பேசி அனுகூலர் போல் நடித்து நம்மை வஞ்சித்து நமக்குத் தீங்கிழைக்க வல்லவர்கள். அவ்வகையில் இவ்விபீஷணன் நம்மை வஞ்சிக்க வந்தவனே. ஆதலால் அவனை ஏற்றுக்கொள்ளலாகாது. இவன் வேவு பார்க்க மட்டும் வந்தவனல்லன். ஸமயம் பார்த்து உன்னையும் லக்ஷ்மணனையும் கொல்லும்படி ராவணனால் ஏவப்பட்டு வந்திருக்கக் கூடும்' என்றான். அங்கதனும் ஜாம்பவானும், 'ராமா! இவனோ ராவணனின் தம்பி. ராக்ஷஸ வம்சத்தைச் சேர்ந்தவன். அவன் வந்த காலமும் தேசமும் தகுந்தவை அல்ல. இவன் உன்னைச் சரணடைந்தவனாயினும் எதிரிகளிடமிருந்து வந்ததால் இவனை பரீக்ஷிக்காமல் ஏற்றுக்கொள்ளலாகாது' என்றனர்.

வானரஸேனர்களின் வாதங்களைப் பொறுமையாகக் கேட்டு கொண்டிருந்த எம்பெருமான் அவர்களுக்கு ஸமாதானம் சொல்லத் தொடங்கினான்:

*ஸக்ருத் ஏவ ப்ரபந்நாய தவ அஸ்மி இதி ச யாசதே ।*
*அபயம் ஸர்வபூதேப்யோ ததாமி ஏதத் வ்ரதம் மம ॥*
(வால்மீகி ராமாயணம் - யுத்தகாண்டம் 18-33)

'வானர ச்ரேஷ்டர்களே! தஞ்சமென்று வந்தடைந்தவர்களை அவர்களிடம் எவ்வளவு தோஷங்கள் இருப்பினும் நான் எவ்விதத்திலும் கைவிடமாட்டேன். எவனொருவன் தன்னை என்னிடம் ஒப்படைத்து நான் உன்னுடையவன் என்று கூறி ஒரு முறை ப்ரபத்தி செய்கிறானோ அவனை நான் ரக்ஷித்தே தீர்வேன். கையைக் கூப்பிக்கொண்டு அடைக்கலம் புகவந்தவன் விரோதியாயினும், நண்பனாயினும் வேறு யாராயினும் அவனைப் பாதுகாக்க வேண்டியதே என் ஸ்வரூபத்திற்குப் பாங்காகும். இந்த ராக்ஷஸன் துஷ்டனாயினும் சரி, நல்லவனாயினும் சரி. இவனால் நம்மை ஒன்றும் செய்ய இயலாது. சரணமடைந்தவனை ரக்ஷிக்காமல் விட்டால் பெரிய தோஷம் ஸம்பவிக்கும். ஆகையால் 'சரணம்' என்ற பொழுதே அவன் விபீஷணனாயினும் அல்லது விபீஷண வேடம் தரித்த ராவணனே ஆயினும் நான் அவனை ரக்ஷித்தே தீர்வேன். இது என்னுடைய வ்ரதமாகும்,' என்று சொல்லிமுடித்தான். இங்ஙனம் ராமன் கூறியதைக் கேட்டு அவன் குணத்தை நன்கு அநுபவித்த வானரஸேனர்கள், 'ராமா! நீயே ஸர்வலோக ரக்ஷகன். பிறர்க்கு ஹிதத்தை அளிப்பதற்கே திருவவதரித்தவன்' என்று உத்கோஷித்தனர்.

*ஒருக்காலே சரணாக அடைகின்றாற்கும்*
*உனக்கடிமை ஆகின்றேன் என்கின்றாற்கும்*
*அருக்காதே அனைவர்க்கும் அனைவராலும்*
*அஞ்சேல் என்றருள் கொடுப்பான் இதுதான் ஓதும்*
*இருக்காலும் எழில் முனிவர் நினைவினாலும்*
*இவை அறிவார் செயலுடன் என் இசைவினாலும்*
*நெருக்காத நீள் விரதம் எனக்கொன்றென்னும்*
*நெறி உரைத்தார் நிலை உணர்ந்து நிலை பெற்றோமே*
(அம்ருதாஸ்வாதினி - 16)

என்று ஆசார்யன் இவைபவத்தைக் கொண்டாடுவது இங்கே நன்கு சுவைக்கத்தக்கது.

ஸ்ரீராமன் விபீஷணனிடித்திற் காட்டிய அபய ப்ரதாநத்தின் மேன்மையை அநுபவித்தோம். இவர்கள் இருவராலும் ஆராதிக்கப்பெற்ற பெரியபெருமாளின் அபயஹஸ்தம் எதனைக் குறிக்கிறது? ஸ்வாமி தேசிகன் மேலே கூறிய ச்லோகம் மூலமாக நம் தர்சனத்திற்கே அஸாதாரணமாக உள்ள சில அர்த்தங்களை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார். அவற்றை சற்று அநுபவிப்போம்.

**பும்ஸாம் பௌந:புந்யம் நிவாரயந் ப்ரபதநே -** எம்பெருமானிடத்தில் ஒரு பலனை உத்தேசித்து ஒருமுறை சரணாகதி பண்ணினாலே போதுமானது, அதே பலனைக் குறித்து மீண்டும் மீண்டும் அவனிடத்தில் சரணாகதியை அனுஷ்டித்து அப்பலன் குறித்த நினைவூட்டுதலை தடுப்பது போலுள்ளது அவன் திருக்கை அமைப்பு என்கிறார் ஆசார்யன்.

எந்தவொரு பலனையும் அடைவதற்கு மிக உயர்ந்த உபாயம் என்று சாஸ்த்ரங்களால் கொண்டாடப்பெற்ற ஒரு கார்யத்தை தடுப்பானேன்? ஸ்வாமி தேசிகன் ப்ரஹ்மவித்யை ந்யாயம் மற்றும் ப்ரஹ்மாஸ்த்ர ந்யாயம் என்ற இரண்டு ந்யாயங்களைக் கொண்டு தெளிவிக்கிறார்.

**ப்ரஹ்மவித்யை ந்யாயம்**

மோக்ஷத்தை அடைவதற்கு உபாயமாகச் சொல்லப்பட்ட 32 வித்யைகளுள் ந்யாஸ வித்யை என்ற சரணாகதியும் ஒன்று. ப்ரஹ்ம வித்யைகளைப் பொறுத்தமட்டில் அவை 'ஆப்ரயநாத்' — அதாவது ஒருமுறை அநுஷ்டித்தால் மட்டும் போதாது, நாம் ப்ரக்ருதி மண்டலத்தில் இருக்கும்வரை அவ்வுபாஸநத்தை நித்யம் அநுஷ்டித்துக் கொண்டே இருக்கவேண்டும் என்று சாஸ்த்ரங்கள் விதிக்கின்றன. சரணாகதியும் ப்ரஹ்ம வித்யை என்பதனால் அதையும் மீண்டும் மீண்டும் செய்ய வேண்டுமோ என்னில், இல்லை, நம் ப்ரபத்தியை சரண்யனிடத்தில் ஒருமுறை அநுஷ்டித்தாலே போதுமானது, நித்யம் அநுஷ்டிக்க வேண்டியதில்லை என்பதனை உணர்த்த வந்தது அரங்கனின் அபயஹஸ்தம் என்று நிர்தாரணம் பண்ணுகிறார் ஆசார்ய ஸார்வபௌமன்.

**ப்ரஹ்மாஸ்த்ர ந்யாயம்**

ப்ரஹ்மாஸ்த்ரத்தைப் ஒருவன் ப்ரயோகப்படுத்தும் பொழுது அதன் மீது முழு விச்வாஸத்துடன் ப்ரயோகம் செய்யவேண்டும். அதனை விச்வஸிக்காமல் இன்னொரு அஸ்த்ரத்தை அதன்மேல் ப்ரயோகம்

ஸ்ரீ:



செய்வானேயாகில் அந்த ப்ரஹ்மாஸ்த்ரம் பலன் கொடுக்காமல் போகும். அனுமனை இந்த்ரஜித் ப்ரஹ்மாஸ்த்ரத்தால் கட்டினான். இதனை உணராத ராக்ஷஸர்கள் அனுமனை மேலும் பல கயிறுகள் கொண்டு கட்டியதால் இந்திரஜித்தின் ப்ரயோகம் செயலிழந்து போனது இங்கே அநுஸந்திக்கத்தக்கது. ஆக இங்கே விச்வாஸம் அவச்யம். ஒரு பலனுக்காக சரணாகதி பண்ணிய பிறகு, பலன் கிடைப்பதில் விச்வாஸம் இல்லாமல் அதே பலனுக்காக இன்னொரு கார்யத்தை செய்வதையும் நம்பெருமாள் அபய ஹஸ்தம் தடுக்கிறது என்றருள்கிறார் ஆசார்யன்.

இப்படி பல பெருமைகளை உடைய அந்த நம்பெருமாளின் அபய ஹஸ்தம் தம்மை ரக்ஷிக்க வேண்டும் என்று ச்லோகத்தைத் தலைக்கட்டுகிறார்.

ஸ்வாமியின் திருக்குமாரரான நயினாராசார்யர் இந்த ச்லோகத்திற்கு அருளிச்செய்த உரையில் திருவரங்கன் சேதனனைப் பார்த்து ‘ஒருமுறை ப்ரபத்தி செய்தாலே நீ விரும்பிய பலன் அனைத்தையும் அளிப்பதற்க்காக நான் காத்துக் கொண்டிருக்கிறேன். அப்படியிருக்க பின்னும் பின்னும் ப்ரபத்தியைச் செய்தால் அளிக்க பலன் இல்லாமல் நான் கடன் பட்டவனாவேன். ஆதலால் என் கொடைச் சிறப்பையும், என் கருத்துக்கு ஏற்ப நீ நடக்கும் தன்மையையும், ப்ரபத்தியின் பெருமையையும் மறுபடி ப்ரபத்தி செய்வதால் நீ குலைத்துவிடாதே!’ என்று கூறித் தடுப்பது போலுள்ளது என்று மிகவும் ரஸமாக அருளிச்செய்கிறார்.

விபவத்தில் ஆளரியாகவும், ராமனாகவும், கண்ணனாகவும் இன்னும் பல அவதாரங்களாகவும் திருவவதரித்த எம்பெருமான் சரணாகத-ரக்ஷண வ்ரதத்தை தன் திருக்கைத் தொட்டுச் செய்து காட்டினான். இக்காலத்தில் ப்ரபத்தி செய்யும் வேளையில், ப்ரபன்னன் தன் ஆசார்யன் மூலமாக ‘மோக்ஷத்தை அடைவதற்கான ஸாதனமாக உமது திருவடிகளை நான் சரணாகதி செய்கிறேன்’ என்கிறான். இப்படி ஒருமுறை இவன் பண்ணின ப்ரபத்தியை ஏற்றுக்கொண்டு ஸ்ரீமந்நாராயணன் ப்ரபன்னனுக்கு தமது திருக்கைகளால் அபய ஹஸ்தத்தைக் காட்டி ‘ஒரே ஒருமுறை என் சரணத்தை நாடினாலே போதும், நீ வேண்டிய பலன் அனைத்தும் உனக்குக் கிடைத்துவிடும், பின்னும் கேட்கவும் வேண்டா, அஞ்சவும் வேண்டா’ என்று ப்ரபத்தியை தலைக்கட்டி அவனை உஜ்ஜீவிக்கின்றான்.

ஸ்வாமி தேசிகன் நமக்காக அருளிய ஸ்ரீஸூக்திகளை முன்னிட்டுக்கொண்டு நாமும் அந்த ஸர்வலோக சரண்யனிடத்தில் சரண் புகுவோமாக!

ஸ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya (31)

## The First Ones Who Set The Divine Ball Rolling

**Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore**

In Aippasi, the Tamil month, we have three Azhwars' Avathara Days lined up – that of Poigai Azhwar, Bhuthath-Azhwar and Peyazhwar, known as the First Azhwars.

| **Features of their Avathara are as follows:** | | | |
|---|---|---|---|
| | **Poigai Azhwar** | **Bhuthath-Azhwar** | **Peyazhwar** |
| **Star of Birth** | Thiruvonam | Avittam | Sathayam |
| **Place of Birth** | Thiruvehka | ThirukKadal Mallai | Thirumayilai |
| **As Manifestation of** | Conch | Mace | Dagger |

It was this trio that set the 'Divya Prabandham' ball rolling so to say, after the Azhwars had a chance meeting in ThirukKovalur.

Poigai Azhwar first went there to worship the Lord on what turned out to be a rainy night. He took shelter in the verandah of a small house and thinking that he would worship the Lord on the morrow, he lay down there. After some time, Bhuthath-Azhwar, with the rain intensifying, reached the same place and since there was just enough space for two to sit only, they both sat there. Then entered Peyazhwar, fully drenched, and the three could barely stand there. Amidst thunder and lightning and under pitch-dark condition, they felt that they were being pressed hard against as someone else was (apparently) trying to squeeze himself in.

They realised through their insight that the 'imposing' fourth person was none other than the Lord Himself. Their joy knew no bounds and they burst into rapturous verses on His greatness.

To start with, Poigai Azhwar removed the external obscurity (darkness) with the Earth as his Lamp, the Ocean as the Oil and the radiant Sun as the Flame. He offered a Garland (Mudhal Thiruvantaadhi) at the feet of the discus-wielding Lord, so that we may cross the misery-ocean.

Bhuthath-Azhwar followed suit as he obliterated internal obscurity (ignorance) with his Love as the Lamp, Eagerness as the Oil and his Heart as the Wick. Melting himself, he lit a Lamp and offered a Garland of Knowledge (Irandaam Thiruvantaadhi) to Narayana.

The darkness having been wiped out completely, Peyazhwar had a wonderful vision of the Lord and His Consort on His frame, launched into his Moonraam Thiruvantaadhi, starting with





"ThirukKanden, Ponmeni Kanden'. "I have seen the lotus-dame on the frame of my ocean-hued Lord, who has the radiance of the golden Sun. He wields a fiery discus and a dextrous conch in his hands.'

Of special significance is the Thiru Avathara Day of Peyazhwar at our Temple. This being his Avathara Sthalam, there is an exclusive shrine for the Azhwar. A 10-day festival culminating in Aippasi-Sathayam is conducted at the Temple. This year, the Avathara Days of the Azhwars fall on October 30, 31 and November 1 respectively. Peyazhwar Uthsavam commences on 23rd October with procession in the mornings and Aasthanam with Perumal and Thiruvoymozhi chanting in the evenings. On the Satrumurai day, there will be a grand purappadu in the evening.

The Vaazhi-Thirunamam of Peyazhwar which is chanted daily at the Temple is given below:

திருப்பொலிந்த மாமயிலை நகருதித்தோன் வாழியே

சீர் ஐப்பசியில் சதயம் செழித்த வள்ளல் வாழியே

நெருக்கமுடன் இடைகழியில் நின்றபிரான் வாழியே

நேசத்தால் திருமாலின் வடிவுகண்டான் வாழியே

‘திருக்கண்டேன்’ என நூறும் சொன்ன செல்வத்தோன் வாழியே

சீராழி வண்ணனையே தெய்வமென்றான் வாழியே

பெருக்கமிகு மழிசையர்கோன் ஏத்தநின்றான் வாழியே

பேயாழ்வார் இணையடிகள் பெருநிலத்தில் வாழியே.

"Hail to the one who rose in the City of Thirumayilai!

Hail to the generous one who hailed on Aippasi-Sathayam!

Hail to the one who stood in a packed vestibule;

Hail to the one who, out of sheer devotion, had the vision of the Lord Vishnu!

Hail to the affluent one who sang a hundred verses starting with ‘ThirukKanden’!

Hail to the one who regarded only the discus-wielder as the Lord!

Hail to the one who was praised by Thirumazhisai Azhwar!

Hail to Peyazhwar’s feet, in this great world!'

*(to be continued…)*


# ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு
12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில்,
ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' இயங்கி வருகிறது.




முகவரி மற்றும் விவரங்களுக்கு:

**‘ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்’**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004.
போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்:**
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.

ஸ்ரீ:

# Srimath Rahasya-Thraya Saaram

## A Manual For Beginners (31)

Smt. Padmalatha Sridharan, Chennai

**Chapter – 30**

**Acharya-kruthya Adhikaram**

Swami elaborates on the duties of an Acharyan in this chapter.

Sriman Narayana is the first Acharyan in our Sathsampradayam and the Rahasyas which have been handed over to generations are unknown to persons of other Sampradayam just like a lioness' milk available only to the cub.

The Acharyas contemplate upon their meaning and if they find Sishyas who are Sathvik, have good conduct, etc., and fit to be acquiesced by Bhagavan, then they test them upon their grasp, aptitude, etc. When the Sishyas become fully interested in learning the Rahasyas and do not consider any other knowledge as important, then the Acharyas will give Upadesams to the Sath Sishyas. The Acharyas also would endeavour to see that the Rahasyarthas do not fall into the hands of persons with Asura Svabhavam like envy, jealous, etc.

The Acharyas lecture upon Thathva, Hitha (means) and Purushartha thus:

1. There exists an eternal Athma which is different from body, sense organs, etc. There exists a Paramathma who is Seshi, Antharyami to all sentient and non-sentient beings. For the Athma, except for this Paramathma, neither self nor anyone else could be the protector.
2. "From time immemorial, I have been caught up in the cycle of Samsara, and to avoid re-births and the resultant sorrows, please protect me by keeping me in Your feet" – This is the prayer to be made to Bhagavan after Guru Parampara Dhyanam and Dvaya Ucharanam, and surrendering unto His feet, your Athma and its belongings and the ensuing responsibilities are to be submitted to Sriman Narayana.



3. "Sadhacharyan has shown me the Perumal, and I have attained Him and He will never let go of me" – With this faith, during the time remaining in this world, as a rehearsal to the blissful experience ahead, behave in a flawless favourable manner.

Swami concludes by saying that the Rahasya-Thraya meanings as elucidated by him, were from the Sath Sampradaya of Purvacharya of Kidambi Appullar (his uncle), who is extolled as 'Vedanta Udhayana' and who had the fortune of doing Madaipalli Kainkaryam (cooking) for Sri Ramanujar, namely Kidambi Aachaan.

Swami says that he was trained like a parrot by his Acharyan and because of his blessings, Bhagavan illuminated hidden meanings too and these were upheld without fault by Swami to advocate to us.

*(to be continued…)*

**ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு**

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**

4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு, மயிலாப்பூர், சென்னை 600 004.

தொலைபேசி: 044-2495 3799.

ஸ்ரீ:



# *With Pranams:*

**S. Venkataramanan,**
18/20, Kesava Perumal South Street,
Opp. Akshara Play School,
Mylapore, Chennai - 600 004.

**SVDD thanks Sri S. Venkataramanan**
for sponsoring this month's issue of Desika Sandesam





பாலாலயம்









ஸ்வாமி தேசிகன் சாற்றுமுறை